1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜய கன்டைனர் டேர்மினல்ஸ் லிமிடெட்டின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டகத்தின் 2.34 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் தெளிவாகவும் விளங்கக்கூடிய வகையிலும் வகைப்படுத்துதல், சமர்ப்பித்தல் மற்றும் தரப்படுத்துதல் வேண்டும். அவ்வாறே இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் (LKAS 01) இன் 27 ஆம் பிரிவின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தவிர ஏனைய நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்படல் வேண்டும். அதன் பிகாரம் காலப் பகுதிக்குரிய நிலையான வைப்பு வட்டி அட்டுறு அடிப்படையில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் இனங்காணப்பட்டிருந்ததுடன் பெற வேண்டிய வட்டி வருமானம், நிலையான வைப்புக்களில் முதலீடு செய்தல் மற்றும் நிலையான சொத்துக்களை அகற்றுதல் தொழிற்படு மூலதன மாற்றங்களில் சீராக்கியதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 28,193,418 இனால் குறைத்து அறிக்கையிடப் பட்டிருந்ததுடன் முதலீட்டு செயற்பாடுக ளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் ரூபா 28,193,418 இனால் அதிகரித்து அறிக்கையிடப்பட்டிருந்தது.	இது வகைப்படுத்தல் வழுக்களாக இருந்ததுடன் எதிர்காலத்தில் சரிசெய்யப்படும்.	காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் வகைப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும்.
(ஆ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 (LKAS 07) இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் பொதுவாக காசு மற்றும் காசுக்கு சமமானவைகளாக வகைப்படுத்துவதற்கு தகைமை பெறுதல் முதலீடு செய்யப்பட்ட விலை / கைப்பற்றப்பட்ட திகதியில் இருந்து குறுகிய கால முதிர்ச்சியடைதல் அதாவது 03 மாதம் அல்லது அதற்கு குறைந்த காலத்தின் போது முதிர்ச்சி அடைகின்ற முதலீடுகளாகும். எனினும் கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் காசு மற்றும் காசுக்கு	இது காசு மற்றும் காசுக்கு சமமானவைகளின் வகைப்படுத்தலில் ஏற்பட்ட வழுவாகும். எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளாக மூன்று மாதங்களில் அல்லது அதற்கு குறைந்த காலத்தில் முதிர்ச்சியடைகின்ற முதலீடுகள் மாத்திரமே இனங்காணப்படல் வேண்டும்.

	சமமானவைகளாக வெளிப்படுத்தப்பட்டுள்ள பெறுமதியில் ரூபா 77,398,510 பெறுமதியான 06 மாதங்களுக்குப் பின்னர் முதிர்ச்சியடைகின்ற 02 நிலையான வைப்புக்கள் அறிக்கையிடப் பட்டிருந்தமையால் அப்பெறுமதியால் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டதுடன் நிலையான வைப்பு அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.		
(இ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 (LKAS 08) இன் 39 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தால் நடப்பாண்டு மற்றும் எதிர்காலத்திற்காக தாக்கமளிக்கின்ற கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்தயிருந்ததுடன் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கான எண்ணக்கரு சட்டகத்தின் 2.34 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் தெளிவாகவும் ஒப்பீடு ரீதியிலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் கம்பனியால் 2024 ஆம் ஆண்டில் பயன்தரு ஆயுட்காலம் மீண்டும் திருத்தப்பட்ட ரூபா 9,426,488 ஆன தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், இயந்திர உபகரணங்களில் 04 விடயங்கள் தனித்தனியாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தாமையின் காரணமாக பயனர்களுக்கு மீளாய்வாண்டில் பயன்தரு ஆயுட்காலம் திருத்தப்பட்ட சொத்துக்களை இனங்காண முடியாதிருந்தது.	சொத்து மெய்மையாய்வு குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரையின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டின் போது 04 விடயங்களில் பயன்தரு ஆயுட்காலம் திருத்தப் பட்டதுடன் மேலும் 12 விடயங்களின் பயன்தரு ஆயுட்காலம் 2023 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டிருந்தது. அது வரையில் பயன்தரு ஆயுட்காலம் திருத்தப்பட்ட மொத்த சொத்துக்களின் எண்ணிக்கை 16 ஆகும். நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் 5.4 இன் கீழ் ஆயுட்காலம் திருத்தப்பட்ட 16 விடயங்களின் விபரம் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காலப் பகுதியில் பயன்தரு ஆயுட்காலம் திருத்தப்பட்ட சொத்துக்கள் பயனர்களுக்கு இனங்காணக்கூடிய வகையில் தனித்தனியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும்.
(ஈ)	இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 (LKAS 16) இன் 7b இன் பிரகாரம் சொத்துக்களை இனங்காண்பதற்காக அவற்றின் கிரயம் குறித்துரைத்த ரீதியில் மதிப்பீடு செய்தல் வேண்டும். எனினும் சொத்து மெய்மையாய்வுக் குழு (Asset Verification Committee) இனால் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்படாத மற்றும் முகாமைத்துவத்தின் பிரகாரம் கிரயம் தனிதனியாக இனங்காண்பதற்கு	ரூபா 492,216 ஆன தளபாடங்கள் மற்றும் ரூபா 1,540,035 ஆன கணனி துணைப் பாகங்கள் பௌதீக ரீதியில் அவதானிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த சொத்துக்கள் 2009 - 2017 இற்கு இடையிலான காலத்தில் கொள்வனவு செய்யப்பட்டவைகளாக இருந்தமையால் அந்த	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் கிரயம் குறித்துரைத்தவாறு மதிப்பீடு செய்யக்கூடிய சொத்துக்கள் இனங்காணப்படல் வேண்டும்.

முடியாதிருந்ததாக குறிப்பிடப்பட்ட முறையே ரூபா 492,216 மற்றும் ரூபா 1,540,035 ஆன தளபாடமும் உபகரணங்களும் மற்றும் கணனியும் துணைப்பாகங்க ளும் என்ற சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.	சொத்துக்களுக்குரிய குறித்துரைத்த கிரயம் உரிய சொத்துக்களுடன் தனித்தனியாக இனங்காண்பதற்கு முடியாத நிலைமையொன்று மாத்திரம் இருந்ததாக சொத்து மெய்மையாய்வுக் குழு அறிக்கையிட்டிருந்தது. அந்த சொத்துக்கள் பௌதீக ரீதியில் நிறுவனத்தில் காணப்படுவதாக குழுவினால் அவதானிக்கப்பட்டிருந்தது. அதனால் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் ரூபா 492,216 ஆன தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் ரூபா 1,540,035 ஆன கணனி மற்றும் துணைப் பாகங்கள் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்து காண்பிக்கப்பட வில்லை.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	1954 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய இலக்கம் 19 என்ற கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் I பகுதியின் 3 ஆம் பிரிவு	ஏதாவது நிறுவனமொன்றில் ஊழியர் மாற்ற முறைமையில் சேவையில் ஈடுபடுத்துவதாயின் நாளொன்றுக்கு ஆகக்கூடியது 08 மணித்தியாலமும், வார மொன்றுக்கு 45 மணித்தியால எல்லையாக இருக்க வேண்டியிருந்த போதிலும் அதற்கு இணங்காத வகையில் கம்பனியால் 2024 ஆம் ஆண்டின் போது செயற்பாட்டு பதவியணியினரில் 47 பேர்களுக்கு 24 மணித்தியாலம் வேலை மாற்ற கடமையில்	கம்பனியின் சேவைத் தேவையின் பிரகாரம் 24 மணித்தியால சேவை செயற்பாட்டு நடவடிக்கைகளை செயற்திறனாகவும் இடையூறு இன்றியும் மேற்கொள்வதற்காக இனங்காணப்பட்டிருந்தது. அது 24 மணித்தியால சேவை மாற்ற முறைமை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காக 2021.02.25 என்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது அங்கீகாரம் கிடைத்திருந்தது.	ஊழியர்களின் வேலை செய்யக் கூடிய நேரம் சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள வகையில் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		சேவையில் ஈடுபடுத்தப்பட்டதுடன் வாரத்திற்கு 02 நாட்கள் மாத்திரமே சேவை பெறப்பட்டிருந்தது.		
(ஆ)	2024 யூலை 26 ஆம் திகதிய இலக்கம் ED/ERD/PRE/2024 /6-04B என்ற தேர்தல் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு, 2024 பெப்ருவரி 28 ஆம் திகதிய இலக்கம் 01/2024 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பிரிவு மற்றும் 2023 செப்டெம்பர் 27 ஆந் திகதிய இலக்கம் 01/2021 (ii) என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவு	அத்தியவசிய சேவையில் ஊழியர்களைச் சேர்ப்பதற்காக திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் மற்றும் தேர்தல் எல்லையில் மேற்கொள்ளும் நியமனங்களுக்காக தேர்தல் ஆனைணயாளர் நாயகத்தின் இணக்கப்பாடு பெற்றுக்கொள் வேண்டியிருந்த போதிலும் 2024 ஆகஸ்ட் 02 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவின் இணக்கப்பாடு இன்றி ஊழியர்களைச் சேர்ப்பதற்கும் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அத் திகதியின் பின்னர் 2024 ஆகஸ்ட் 06 ஆந் திகதி மேற் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்காக இணங்கி தொழில்நுட்ப தொகுதியில் 10 ஊழியர்கள் சேர்ப்பதற்காக மாத்திரம் இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும் விண்ணப்பித்த 12 ஊழியர்களில் 11 பேர்களும் தொழில்நுட்ப தொகுதியில் அல்லாத ஊழியர்களாக இருந்ததுடன் ரூபா 56,280 செலவினம் செய்து தேர்தல் காலங்களில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருந்த போதும்	2024.08.19 ஆந் திகதி தேர்தல் ஆணைக்குழுவினால் EDR/PE/2024/S-814 எங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அத்தியவசிய கடமைகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்ற 10 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பை மேற் கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழு அனுமதி கிடைத்திருந்தது. ஊழியர்களை சேர்ப்பதற்கான அறிவித்தல் பிரசுரித்த தேர்தல் கால எல்லையில் 04 நாட்களின் பின்னர் மற்றும் அறிவித்தல் பிரசுரித்து 17 நாட்களின் பின்னர் அங்கீகாரம் கிடைத்திருந்தது. நிறுவனத்தின் மீதியாக உள்ள வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகளின் போது இவ்வாறு ஏற்படாமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2024.08.06 ஆம் திகதி நிறுவனத்தின் மூலம் அத்தியவசிய கடமைகளுக்காக ஊழியர்களை சேர்த்தல் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அந்த சகல பதவிகளும் தனித்தனியாக விரிவாக காண்பிக்கப் பட்டுள்ளது. 2024.08.02 ஆம் திகதி நிறுவனத்தின் 03 விளம்பர	அத்தியவசிய ஊழியர்களைச் சேர்ப்பதற்காக திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் மற்றும் தேர்தல் கால எல்லையில் மேற் கொள்ளப்பட்ட நியமனங்களுக்காக தேர்தல் ஆணையாளர் நாயகத்தின் முன் இணக்கப்பாடு பெறப்படல் வேண்டும்.

		ஆட்சேர்ப்புக்கள் மேற் கொள்ளப்பட்டிருக்க வில்லை.	அறிவித்தல்கள் பத்திரிகைகளில் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) அனுப்பப்பட்டுள்ளது. அதன் போது நிறுவனத்தின் வெற்றிடப் பதவிகள் சரியாக காண்பிக்கப்பட்டுள்ளது. இந்த வெற்றிடப் பதவிகளுக்காக நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட போதிலும் இது வரை ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவில்லை.	
(இ)	2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் விநியோகிக்கப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூலின் (Operational Manual) 3.2 (ii) பிரிவு மற்றும் 3.3(ii) பிரிவு	3.2 (ii) பிரிவின் பிரகாரம் கம்பனிக்காக முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை யொன்று தயாரித்து அதற்காக பணிப்பாளர் சபையினதும் வரிசை அமைச்சினதும் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு பெறப்படாதிருந்ததுடன் பிரிவு 3.3(ii) இன் பிரகாரம் சகல பொது முயற்சிகளினாலும் அங்கீக்கரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையுடன் நிறுவனக் கட்டமைப்பு தயாரிக்கப்பட வேண்டியி ருந்த போதிலும் கம்பனி அந்த தேவையினை நிறைவேற்றியிருக்க வில்லை.	எமது நிறுவனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையுடன் நிறுவனக் கட்டமைப்பு, முறையான ஆட்சேர்த்தல் நடைமுறைக ளுக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் 2024.06.13 ஆந் திகதி கிடைத்திருந்ததுடன் வரிசை அமைச்சு மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது. இது தற்போது பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப் பட்டுள்ளது. அதன் பின்னர் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வாய்மூலம் அறிவித்தல் வழங்கிய பிரகாரம் புதிய பணிப்பாளர் சபையின் மூலம் மீண்டும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஆட்சேர்த்தல் நடைமுறை (SOR) ஊழியர் எண்ணிக்கையுடன் நிறுவனக் கட்டமைப்பும் அனுப்பப்பட்டுள்ளது.	கம்பனிக்காக முறையான ஆட்சேர்த்தல் நடை முறை தயாரித்து அதற்காக பணிப்பாளர் சபையினதும் வரிசை அமைச்சினதும் அங்கீகாரம் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாடு என்பன பெறப்படல் வேண்டும்.

1.7 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
இலக்கம் 25/2022 என்ற சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டத்தில் முதலாவது	2024.12.10 ஆந் திகதிய கடிதம் மூலம் உள்நாட்டு	அரசாங்கத்தால் அறிமுகப்

பட்டோலையின் ii ஆவது பகுதியின் விடயம் 04 இன் கீழ் எண்ணெய் பம்பிக் கட்டணம் வரி விடுதலை சேவையாக கவனத்திற் கொள்ள முடியாதிருந்ததாக காண்பிக்கப்பட்ட போதும் 2022 ஒக்டோர் முதல் திசம்பர் வரை, 2023 மற்றும் 2024 சனவரி முதல் திசம்பர் 10 வரை முறையே ரூபா 115,462,139 தொகை, ரூபா 420,136,784 மற்றும் ரூபா 499,685,324 ஆன எண்ணெய் பம்பியிடல் கட்டணத்தின் அடிப்படையில் அறவிட வேண்டிய சமூக பாதுகாப்பு வரி முறையே ரூபா 2,960,568 தொகை, ரூபா 10,772,738 மற்றும் ரூபா 12,812,393 ஆகும். அதனால் இந்த காலத்திற்குரிய மொத்த சமூக பாதுகாப்பு வரியான ரூபா 26,545,699 வரித்தொகை அறவிடப்படாமல் பட்டியலிடப்பட்டிருந்தமையால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அந்த தொகை அனுப்புவதற்கு முடியாதிருந்தது.	இறைவரித் திணைக்களத்தால் பம்பியிடல் கட்டணம் இந்த வரியிலிருந்து விடுவிக்க முடியாததாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2024.12.11 ஆந் திகதி முதல் எமது வாடிக்கையாளர்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற பட்டியலின் மூலம் பம்பியிடல் கட்டணத்திற்காக சமூகப் பாதுகாப்பு வரியை அறவிடல் ஆரம்பிக்கப்பட்டு இது சரி செய்யப்பட்டுள்ளதென அறியத்தருகின்றோம்.	படுத்தப்படுகின்ற வரிச் சட்டத்தின் பிரகாரம் உரிய வரியை சேகரித்து அரசாங்கத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 243.4 மில்லியன் மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 243.8 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் 0.16 குறைவொன்று காணப்பட்டது.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. விற்பனைக் கிரயம் மீளாய்வாண்டின் போது 27 சதவீதம் அதிகரித்திருந்ததுடன் செயற்பாட்டு பதவியணியினருக்காக செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 53.2 மில்லியனால் அதாவது 50.4 சதவீதத்தால் உயர்வடைந்தமை ஒட்டுமொத்த விற்பனைக் கிரயம் அதிகரித்தமைக்கு தாக்கமளித்திருந்தது.

ii. நிருவாக செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 10 சதவீதம் அதிகரித்திருந்ததுடன் அதில் அலுவலக ஊழியர் சம்பளம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 39.9 சதவீதத்தாலும் பாதுகாப்பு செலவினம் 33 சதவீதத்தாலும் உயர்வடைந்தமை தாக்கமளித்திருந்தது.

iii. நிதி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டில் 34 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் செயற்பாடல்லாத வருமானம் 90 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 41.9 சதவீதத்தால் குறைவடைந்தமை இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

2.3 விகிதாசார பகுப்பாய்வு

2023 ஆம் ஆண்டில் நடைமுறை விகிதம் 5.16:1 மற்றும் விரைவு விகிதம் 5.09:1 ஆக இருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் அந்த விகிதம் முறையே 8.26:1 மற்றும் 8.08:1 ஆக காணப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கம்பனியின் பணியாக வாடிக்கையாளர்களினால் வழங்கப்படுகின்ற எண்ணெய்யைக் களஞ்சியப்படுத்தி அவர்களின் கோரிக்கையின் பிரகாரம் கப்பல்களுக்காக வழங்கி கட்டணம் அறவிடல் ஆகும். அதன் பிரகாரம் கம்பனியின் பொறுப்பில் உள்ள மெற்றிக்தொன் 1000 இயலளவை உடைய இலக்கம் 102 என்ற எண்ணெய்த் தாங்கி 2024 திசம்பர் 31 இல் உள்ளவாறு 380 (HSFO) எரிபொருள், Lanka Maritime Services Ltd இன் மெற்றிக்தொன் 162.257 இலங்கை சுங்கத்தால் அரசுடமையாக்கப் பட்டிருந்தது. மேலும் அந்த நிறுவனத்தால் இந்த எண்ணெய் விடுவிக்காதிருந்தமையாலும், 380 (HSFO) எரிபொருள் பயன்படுத்தப்படாதிருந்தமையாலும் ஏனைய எரிபொருள் வகையொன்றை களஞ்சியப்படுத்துவதற்கு முடியாமல் 2020 ஆம் ஆண்டு முதல் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முடியாமல் பயனற்றுக் காணப்பட்டது.	இலங்கை சுங்கத்தால் அரசுடமையாக்கப்பட்ட மெற்றிக் தொன் 162.257 அளவு தொடர்பாக காணப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் தற்போது முடிவடைந்துள்ளமையால் அந்த அளவு இலங்கை சுங்கத்தால் இரண்டு சந்தர்ப்பங்களில் கேள்வி கோரப்பட்டுள்ளதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழ் உள்ள மெற்றிக் தொன் 72 அளவு தொடர்பாக இலங்கை துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான உரித்துக்கள் தொடர்பாக இலங்கை சுங்கத்தால் விசாரணை செய்யப்பட்டதுடன் அந்த அளவு தொடர்பாக உரித்தில்லாதிருந்தாக இலங்கை துறைமுக அதிகார சபையால் அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் எங்களால் 2025.01.01 ஆந் திகதி கடிதம் மூலம் அது தொடர்பாக இலங்கை சுங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடி எண்ணெய்த் தாங்கியின் இட வசதிகளை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மனிதவள செயற்பாடுகள் மற்றும் சம்பளப் பதிவேடுகள் தொடர்பான நடவடிக்கைகளை கையினால் (Manual) மேற்கொண்டதன் காரணமாக செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் பணிகளை நிறைவேற்றுவதற்கு உத்தியொன்று தேவையாக	இந்த HR & Payroll முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாக தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக சனாதிபதி பணியகத்தின் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான இரண்டு	செலவிடப்பட்ட செலவினத்திற்குரிய HR & Payroll முறைமை ஸ்தாபிக்க வேண்டியிருந்ததுடன் அதன் மூலம் இந்தப்

இருந்தமையால் 2021 ஆம் ஆண்டு முதல் ரூபா 976,000 செலவில் பெறப்பட்ட HR & Payroll முறைமை இதுவரையிலும் செயற்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டமை மற்றும் HR & Payroll முறைமையின் மூலம் பெறப்பட வேண்டிய இறுதி விளைவான சம்பள பத்திரம் சரியாக அச்சிட்டுக் கொள்வதற்கு இதுவரையிலும் தவறியிருந்தமையால் செலவிடப்பட்ட செலவினத்திற்கு உச்ச நலன்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.	நிபுணர்களின் உதவி தற்போது பெறப்படுவதுடன் அதற்குரிய நிறுவனத்தின் உத்தியோகத்தருடன் கலந்துரையாடல் இரண்டு தடவைகள் நடாத்தப்பட்டு சரி செய்ய வேண்டிய பிரிவுகள் தொடர்பாக அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அவற்றை ஆய்வு செய்து அது தொடர்பாக மிகுதித் தீர்மானத்தை எடுப்பதற்கு கம்பனி இணங்கியுள்ளது.	பணிகளை செயற் திறனாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.